சார்பு நீதிமன்றம், அவிநாசி

OS. No. 179/2019

15.07.2022

PW1- அலமேலு

4 மற்றும் 5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கோயம்புத்தூரில் குடியிருந்து வருகிறேன். 11.04.2004 ம் தேதியிட்ட பாகசாசன ஆவணப்படி வழக்கு சொத்தானது மேற்படி ஆவணத்தில் A ஷெட்யூல் சொத்தில் எனக்கு கூட்டாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தானது எனக்கு, என் தாயார் தெய்வகுஞ்சாரம், எனது சகோதரர்கள் சண்முகசுந்தரம் மற்றும் குமார் ஆகியோருக்கு கூட்டாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். நான்தான் என் வழக்கறிஞருக்கு வழக்க தாக்கல் செய்வதற்கான விவரங்களை சொன்னேன். எனக்கு படிப்பறிவு இல்லை. ExA6 பாகசாசன ஆவணத்தில் நான் ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டுள்ளேன். ExA9 ஆவணத்திலும் நான் ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டுள்ளேன் என் குழந்தைகள் சொல்லிக் கொடுத்ததால் நான் போட்டேன். எனக்கு படிப்பறிவு உள்ளது நான் வழக்கிற்காக வேண்டுமென்றே பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் 4, 5 பிரதிவாதிகளை எனக்கு தெரியும். 4, 5 பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் MM கிளாத்திங் என்ற பெயரில் 2010 ம் வருடத்திலிருந்து நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகள் எனக்கு வாடகை வாங்கும் வகையில் பழக்கம். என்னுடைய முதல் விசாரணையில் 4 ம் பிரதிவாதி கடைக்கு உரிமம் பெறுவதற்காக வாடகை ஒப்பந்தத்தை பதிவு செய்து கொள்ளலாம் என்று கேட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி கடைக்கு உரிமம் பெறுவதற்கு வாடகை ஒப்பந்தம் பதிவு செய்ய வேண்டும் என்று அரசு விதிகள் எதுவும் இருக்கிறதா என்று நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடைக்கு 2010 ம் ஆண்டே TIN No. வாங்கி விட்டார்கள் எனவே நான் சொல்வதுபோல் 4 ம் பிரதிவாதி புதிதாக உரிமம் எதுவும் எடுக்க வேண்டியது இல்லை தற்போது நான் வழக்கிற்காக பொய்யான சங்கதிகளை சொல்கிறேன் என்றால் சரியல்ல. ExA9 ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்கள் எனது சகோதரர், தாயார் மற்றும் என்னுடையதுதான் என்றால் சரிதான் ஆனால் என்னிடம் வாடகை ஒப்பந்தம் என்றுதான் சொல்லிதான் கையெழுத்து வாங்கினார்கள். நான் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றுதான் கையெழுத்து செய்தேன். மேற்படி ExA9 ஆவணத்தின் வாயிலாக 4 ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை விற்பனை செய்வதற்கு நான் பொது அதிகாரம்

கொடுத்தாக தெளிவாக சரத்துக்கள் உள்ளது என்றால் சரியல்ல. எங்களுக்கு பணத் தேவை ஏற்பட்டதால் வழக்கு சொத்தை விற்பனை செய்வதற்கு 4ம் பிரதிவாதிக்கு பொது அதிகார முகவர் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டு தற்போது பொய்யாக வாடகை ஒப்பந்த பத்திரம் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 15.02.2011 அன்றுதான் நான் பிரதிவாதிக்கு மேற்படி ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்தேன் என்றால் சரிதான். 17.02.2011 ல் 4ம் பிரதிவாதி சின்னச்சாமி, A.L. பெரியசாமி என்பவருக்கு வழக்கு சொத்தை கிரையம் கொடுப்பதற்காக பதிவு செய்த கிரைய ஒப்பந்தப்பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு 13.02.2014ம் தேதி மேற்படி கிரைய ஒப்பந்தத்தை கால நீட்டிப்பு செய்து அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி AL பெரியசாமி ஒப்பந்தப்படி 2 ஆண்டுகள் கடந்தும் கிரையம் பெறாததால் மேற்படி கிரைய ஒப்பந்தத்தையும் கால நீட்டிப்பு ஆவணத்தையும் 16.07.2014 தேதியில் ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 5ம் பிரதிவாதிக்கு தன்னுடைய தொழிலுக்கு வழக்கு சொத்து தேவைப்பட்டதால் 16.07.2014ம் தேதியிட்ட 7230/2014 ஆவண எண்ணாக கிரையம் பெற்றுக்கொண்டுள்ளார் என்றால் சரிதான். மேற்கண்ட சங்கதிகள் எல்லாம் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் நேரடியாக தெரியாது. மேற்படி சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி 4ம் பிரதிவாதி கிரைய சொத்தை விற்பனை செய்ததற்கு ஆதரவாக எனக்கும் என் சகோதரர் மற்றும் தாயாருக்கும் பணம் கொடுத்து அதற்கான ரசீதும் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. 2014ம் வருடத்திற்கு பிறகு நாங்கள் வாடகை பெறுவதாக வழக்கு சொத்திற்கு வாடகை வசூலிப்பதாக தெரிவித்துள்ளோம் ஆனால் அதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பொது அதிகாரப்பத்திரத்தில் உள்ள சங்கதிகள் வாடகை ஒப்பந்த பத்திரத்தில் வராது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி என்னுடைய முதல் விசாரணையில் வழக்கு சொத்து ரூ.1,25,000/- பெறும் என்று சொல்லியிருக்கிறேன் ஆனால் அதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. சந்தை மதிப்பை சொல்லியிருக்கிறேன். மேற்படி நாங்கள் 4ம் பிரதிவாதியிடமிருந்து கிரைய தொகையை பெற்றதற்கு ரசீது வைத்துள்ளார் என்றால் நான் எந்தக் கிரையத் தொகையும் வாங்கவில்லை. நான் 4ம் பிரதிவாதி மீது சந்தேகப்பட்டு வழக்கு சொத்து சம்பந்தமாக வில்லங்கம் பார்த்ததாக சொல்லியிருக்கிறேன் மேற்படி வில்லங்கம் பார்த்ததற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நாங்கள் வழக்கு சொத்தை கிரையம் கொடுத்து விட்டு அதற்கான தொகையை வாங்கிவிட்டு தற்போது சந்தை விலை கூடியிருப்பதால் 4ம் பிரதிவாதியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கோடு இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 2011ம் ஆண்டு எழுதப்பட்ட பொது அதிகாரப்பத்திரத்திற்கும் 2014ம் ஆண்டு எழுதப்பட்ட கிரைய ஆவணத்திற்கும்

இடையே 4 ஆண்டுகள் இடைவெளி உள்ளது என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி எங்கள் சொத்தை அபகரிக்க வேண்டும் என்று நினைத்திருந்தால் 2011ம்ஆண்டிலேயே 3ம் நபர் பெயரிலோ தன் பேரிலேயோ கிரைய ஆவணத்தை மேற்படி பொது அதிகாரப்பத்திரத்தின் வாயிலாக ஏற்படுத்தியிருக்க முடியும் என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் எங்களை ஏமாற்றியதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் மீது நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி உரிய தொகை கொடுத்து வழக்கு சொத்தை கிரையம் பெற்று வருவாய்த்துறை ஆவணங்களில் தன் பெயருக்கு உரிய மாற்றங்களை ஏற்படுத்தி அமைதியான சுவாதீனம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் தற்போது வரை ஊர்ஜிதத்தில் உள்ளது என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பிறகு சிட்டி யூனியன் வங்கியில் மேற்படி வழக்கு சொத்தை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 2020 ம் ஆண்டு மேற்படி கடனை நீட்டிப்பு செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வில்லங்கம் பார்த்திருந்தால் வங்கியையும் தரப்பினராக சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி பெயரில் 2014ம் வருடம் கிரையம் நடைபெற்றது என்றால் சரிதான். கிரையம் பெற்ற 5 ஆண்டுகளுக்கு பிறகுதான் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் கிரையம் பெற்றது எனக்கு தெரியாது. காலவரம்பு சட்டத்திற்கு என் வழக்கு பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ExA13 ஆவணத்தில், ExA9 பொது அதிகாரப்பத்திரத்திலும் நான் தரப்பினராக இருப்பதால் மேற்படி ஆவணங்களை ரத்து செய்ய விளம்புகை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. உரிய நீதிமன்ற கட்டணம் கட்டிதான் ரத்து செய்ய பரிகாரம் கோர இயலும் என்றால் சரியல்ல. உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தாமலும் உரிய பரிகாரம் கோரமலும் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் செய்திருக்கிறேன். நான் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருப்பதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் திருமணமாகி கோயமுத்தூர் சென்று விட்டேன் அவ்வப்போது வழக்கு சொத்திற்கு வந்து பார்ப்பேன். தற்போது வரை 5ம் பிரதிவாதிதான் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. என் சகோதரர் குமார் கோயமுத்தூர் சிங்காநல்லூரில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 2, 3ம் பிரதிவாதிகள் கோயமுத்தூர் செல்வபுரத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் 1 முதல் 3 பிரதிவாதிகளுடன் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வில்லங்கம் பார்த்தவுடன் பிரதிவாதிகளுக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்று எனக்கு தெரியாது. நான் பொது அதிகாரப்பத்திரம் என்று

நன்றாகத்தெரிந்துதான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் முழு மன சம்மதத்துடன்தான் பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி ஆவணத்தை ஏற்படுத்திக்கொடுத்தோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நானோ, 1 முதல் 3 பிரதிவாதிகளோ எப்போதும் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. அதனால் 2019 ம் ஆண்டு 4, 5 பிரதிவாதிகள் எங்கள் சுவாதீனத்தை தடுத்தார்கள் என்று பொய்யாக வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் குடிநீர் இணைப்பு, மின் இணைப்பு ஆகியவற்றிற்கான வரிகளை அவர் பெயரில் செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd/- **அலமேலு**

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2022.07.16 17:41:21 +0530

Subordinate Judge,
Avinashi.